விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆவணி - 12 சனி 28.08.2021 மலர் - 2, இதழ் - 144


# சேவாபாரதி வென்றது

விஜயபாரதம்

கேரள மாநிலத்தில் சேவா பாரதி அமைப்பு, மழை, வெள்ளம், கொரோனா உள்ளிட்ட பாதிப்புகளில் தொடர்ந்து மக்கள் நிவாரணப் பணிகளை செய்து வருகிறது. இந்நிலையில், சேவா பாரதி தொண்டர்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் சின்னம், அடையாளங்களைப் பயன்படுத்தி நிவாரணப் பணிகளை செய்கிறார்கள் என கிராம பஞ்சாயத்து தலைவர், வார்டு கவுன்சிலர் மற்றும் சிலர் புகாரளித்தனர் என்று கூறி கண்ணூர் மாவட்ட ஆட்சியர், சேவாபாரதியை ஒரு நிவாரண நிறுவனமாக நியமித்த உத்தரவை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்தார்.

இதனை எதிர்த்து தேசிய சேவாபாரதி சார்பில் கேரள உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இதில், சேவா பாரதி 1,270 உதவி மையங்கள், 72 தனிமைப்படுத்தல் மையங்கள், 12 கோவிட் பராமரிப்பு மையங்கள், 156 அரசு கோவிட் பராமரிப்பு மையங்களில் சேவை, 1,531 கோவிட் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உணவு விநியோகிக்கும் மையங்கள், 616 இரத்த தான மையங்கள் கேரளா முழுவதும், 782 இடங்களில் நோயெதிர்ப்பு மருந்து வழங்கும் மையங்கள், 42 ஆலோசனை மையங்கள், 128 ஆம்புலன்ஸ் மற்றும் 552 பிற சேவை வாகனங்கள் ஆகியவற்றை நடத்தி வருகிறது என சேவா பாரதியின் கேரள பொதுச்செயலாளர் டி. விஜயன் மனுத்தாக்கல் செய்தார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம், சேவாபாரதி நியமனத்தை ரத்து செய்வதற்கு முன்பு மனுதாரருக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை. அரசியல் சின்னத்தை யார் பயன்படுத்தினார்கள், அது எங்கே பயன்படுத்தப்பட்டது, நிவாரணப் பணியின் போது எந்த அரசியல் கட்சியின் சின்னங்கள், அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டன என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை. சேவா பாரதிக்கு எதிரான புகார்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை அல்ல என்பதை உறுதிப்படுத்த மாவட்ட நிர்வாகம் எந்த ஆரம்ப விசாரணையும் செய்யவில்லை’ என்று கூறி மாவட்ட ஆட்சியரின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டது.

# இ-ஷ்ரம்



விஜயபாரதம்

கட்டுமானத் தொழிலாளர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், சாலையோர விற்பனையாளர்கள் என பாரதப் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றும் இவர்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், வருவாயைப் பெருக்கவும் அரசு தரப்பிலிருந்து பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அத்திட்டங்கள் சரியாக இவர்களைச் சென்று சேர்வதில்லை. அதேபோல, இவர்களின் பணி நிலவரம், தொழிலாளர்களின் நிலை குறித்த சரியான புள்ளி விவரங்களும் இல்லை. அதற்காகவே மத்திய அரசு 'இஷ்ரம்' (eshram) என்ற பெயரில் புதிய இணையதளத்தை உருவாக்கியுள்ளது. இதில் அமைப்பு சாராத் தொழிலாளர்கள் அனைவரின் பணி விவரங்கள், பல்வேறு துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கான சமூக நலத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கணக்கெடுப்புகள் இடம் பெற்றிருக்கும். அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் அவர்களை நேரடியாகச் சென்று சேர இத்திட்டம் உதவும். இதில் 38 கோடி அமைப்பு சாராத் தொழிலாளர்களைப் பதிவு செய்யவைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனுடன் '14434' என்ற இலவச தொலைபேசி எண்ணும் துவக்கப்பட்டுள்ளது. இதில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும். தொழிலாளர்கள் தங்களது ஆதார் எண், வங்கிக் கணக்கு ஆகிய விவரங்களை பதிவுசெய்யலாம் என்பது உள்ளிட்ட ஏராளமான அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

# ஜாலியன் வாலாபாக் நினைவிட வளாகம்



விஜயபாரதம்

கடந்த 1919 ஏப்ரல் 13ம் தேதி பஞ்சாப் மாநிலம் அமிர்தரசில் உள்ள ஜாலியன்வாலா பாக் எனும் இடத்தில் கூடிய மக்கள் கூட்டத்தின் மீது ஆங்கிலேய அதிகாரி ஜெனரல் டயர் தலைமையிலான காவலர்கள் ஈவு இரக்கமின்றி துப்பாக்கிசூடு நடத்தினர். இதில், பெண்கள், குழந்தைகள் உட்பட ஏராளமான மக்கள் இறந்தனர். சுதந்திரத்திற்காக உயிரை தியாகம் செய்தவர்களின் நினைவை போற்றும் வகையில், அங்கு நினைவிடம் அமைக்கப்பட்டது. அந்த நினைவிடத்தில் புதுப்பிக்கும் பணிகளை சமீபத்தில் மத்திய அரசு மேற்கொண்டது. அதில் முக்கிய இடமான சாஹிதி கிணறும் சீரமைக்கப்பட்டுள்ளது. பார்வையாளர்களின் வசதிக்காக நடைபாதைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. பயன்பாட்டில் இல்லாத கட்டடங்கள் சீரமைக்கப்பட்டு நான்கு அருங்காட்சியகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அருங்காட்சியகத்தில் 1919 ஏப்ரல் 13 அன்று நடைபெற்ற நிகழ்வுகளை காண்பிக்கும் ஒலி ஒளி காட்சியும் இடம்பெறும். புதுப்பிக்கப்பட்ட இந்த நினைவிடத்தை பிரதமர் மோடி இன்று திறந்து வைக்க உள்ளார். காணொலி காட்சி வழியாக நடைபெறும் இந்நிகழ்வில் மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்க உள்ளனர்.



விஜயபாரதம்

# தி.மு.க. ஹிந்து விரோத அரசு

இந்து முன்னணியின் மாநில தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் கோவையில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், 'கடந்தாண்டு கொரோனா காரணமாக இந்து முன்னணியே சில கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு விநாயகர் சதுர்த்தி நிகழ்ச்சி நடந்தது. தற்போது கொரோனா குறைந்துள்ளது. பல மதங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பள்ளிகள் திறக்கப்படுகிறது. டாஸ்மாக் படு ஜோராக நடைபெறுகிறது. மக்கள் பாதிக்கப்படாமல் உரிய சமூக இடைவெளியுடன் இவ்விழாவை கொண்டாட எங்கள் மாநில நிர்வாக குழு முடிவு செய்துள்ளது. தமிழகம் முழுவதும் 1.25 லட்சம் இடங்களில் விநாயகர் சிலைகள் வைக்க பதிவு செய்துள்ளோம். இதற்கு அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். ஆரம்பம் முதலே எதிர்ப்பை மீறிதான் இவ்விழாவை நடத்துகிறோம். அரசு அனுமதி கொடுக்கும் என்று நம்புகிறோம். இல்லையென்றாலும் தடையை மீறி விநாயகர் சதூர்த்தியை நடத்துவோம். பேப்பர் கூழ், கிழங்கு மாவு கொண்டு சிலைகளை தயாரிக்கிறோம் அதனால் விநாயகர் சிலைகளை கரைக்கும் போது நீர்நிலைகள் மாசுபடாது. ஹிந்துக்களுக்கு விரோதமாக செயல்படவில்லை என்று தி.மு.க அரசு கூறுகிறது. அப்படியென்றால் விழாவுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். திமுக ஹிந்து விரோத அரசாக உள்ளது. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பது ஆரம்பத்தில் இருந்தே நடைமுறையில் உள்ளது. திமுக அரசு சர்ச்சில் பெண்களை பாதிரியார்களாக பணி அமர்த்துவதற்கும், மசூதிக்குள் பெண்களை அனுமதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமா? தமிழகத்தில் ஹிந்து கோவில்கள் மட்டும் இடிக்கப்படுகிறது. அதிகாரிகள் முதலமைச்சருக்கு தவறான தகவல் கொடுத்து திசை திருப்புகின்றனர்' என கூறினர்.

# இல. கணேசன் பதவியேற்றார்



விஜயபாரதம்

மணிப்பூர் மாநில ஆளுநராக பா.ஜ.க மூத்த தலைவர் இல. கணேசன் அவர்களை நியமனம் செய்து குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் கடந்த வாரத்தில் அறிவித்தார். முன்னதாக, சிக்கிம் மாநில ஆளுநர் கங்காதர் பிரசாத் மணிப்பூர் மாநில ஆளுநராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தார். இந்நிலையில், இல. கணேசன் தற்போது நியமனம் செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து, பா.ஜ.க தேசிய குழு உறுப்பினர், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை இல. கணேசன் ராஜினாமா செய்தார். தனது ராஜினாமா கடிதத்தை மாநில பாஜக தலைவர் அண்ணாமலையிடம் வழங்கினார். பிறகு நேற்று மணிப்பூர் மாநில ஆளுநராக இல.கணேசன் நேற்று அதிகாரப்பூர்வமாக பதவி ஏற்றார்.

# ரிமோட் கண்ட்ரோல் சிக்னல்



விஜயபாரதம்

கோவையில் சோதனை முயற்சியாக போக்குவரத்து காவல்துறையினர் ரிமோட் மூலம் சிக்னலை இயக்கம் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து, கோவை, கணபதி டெக்ஸ்டைல்ஸ் பாலம் அருகே உள்ள போக்குவரத்து சிக்னலை நவீன ரிமோட் கண்ட்ரோல் மூலம் ஒழுங்குபடுத்தும் சோதனை ஓட்டம் நடைபெறுகிறது. கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு சாலை சிக்னல்களை தன்னிச்சையாக இயக்கும் திட்டம் அமலுக்கு வந்தது. இதில் சிக்னல்களில் காவலர் பணியில் இல்லாத போது தனியாக முறையில் டைமர் வைத்து இயக்கப்படுகின்றன. தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த முறையில், காவலர் கையில் ரிமோட்டை வைத்துக்கொண்டே சிக்னலை இயக்க முடியும், இதற்காக அவர் கூண்டில் அமர வேண்டிய கட்டாயம் இல்லை. சாலையில் நடந்து கண்காணித்துக் கொண்டே சிக்னலை இயக்கலாம். இதில் உள்ள சென்சார் மூலம் சிக்னல்களை 100 மீட்டர் தொலைவில் இருந்தும் இயக்க முடியும். ரிமோட்டில் 1 முதல் 8 வரையிலான வரிசை எண்கள் உள்ளன. இதில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வழித்தடம் பதிவு செய்யப்பட்டிருக்கும். எந்த எண்ணை காவலர் இயக்குகிறார் அந்த எண்ணிற்கான பச்சை விளக்கு எரியும்.

---

# பொன்முடியில் பொன்மொழி




விஜயபாரதம்

முன்பெல்லாம் பொறியியல் கல்வியில் 2ம் ஆண்டில் பெயிலானால் 3ம் ஆண்டு போக முடியாது, 3ம் ஆண்டு பெயிலானால் 4ம் அண்டு போக முடியாது. இதனால் மாணவர்கள் மிகவும் சிரமப்படுவார்கள். எனவே, இதனை முன்னிட்டு மாணவர்கள் பரிட்சையில் பெயில் ஆனாலும், தொடர்ந்து அடுத்தடுத வருடங்களுக்கு செல்லவும் தேர்வுகளை நடுநடுவே எழுதிக்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்படும். அது விரைவில் அறிவிக்கப்படும் என்ற ஒரு பொன்மொழியை சட்டசபையில் உதிர்த்திருக்கிறர் தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி. பொறியியல் துறையில் அரியர் வைத்தாலும் அடுத்த வருட படிப்பைத் தொடரலாம். அரியரை ஒவ்வொரு செமஸ்டரிலும் எழுதிக்கொள்ளலாம் என்ற அடிப்படைகூட தெரியாத இவரை எப்படி உயர்கல்வித்துறை அமைச்சராக ஸ்டாலின் நியமித்தார். அது குறித்து அமைச்சருக்குத் தெரியவில்லை என்றாலும் பரவாயில்லை, சட்டசபையில் பேசுவதற்கு முன்பு அதிகாரிகளிடம் அது குறித்து கேட்டறிந்து பேசி இருக்கலாமே என நெட்டிசன்கள் பொன்முடியை சமுக வலைத் தளங்களில் கிண்டல் அடித்து வருகின்றனர்.

# அர்ச்சகர்கள் நியமனம் தடை வழக்கு

வேத கல்வி அகில இந்திய ஆதி சைவ சிவாச்சாரியார்கள் சேவா சங்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலர் முத்துகுமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்ததார். அதில், கடந்த, 2021 ஜூலையில், கோவில்களில் அர்ச்சகர்கள், ஓதுவார்கள், பரிச்சாரகார் பணியிடங்களை நிரப்ப விளம்பரம் வெளியிடப்பட்டது. 10 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவம் உள்ள அர்ச்சகர்களை நீக்கும் நோக்கிலேயே இவ்விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

அர்ச்சகராக நியமிக்க ஓராண்டு வகுப்பை முடித்து சான்றிதழ் பெற்றிருந்தால் போதும் என அரசு கூறுகிறது. ஆகமத்தில் அனுபவம் பெற்றவர்கள் சான்றிதழ் வகுப்பு படிப்பது இல்லை. அவர்கள் இளம் வயதிலேயே குருவிடம் தீட்சை பெற்று, குறைந்தது மூன்று ஆண்டுகள் வேத கல்வி பயில்வார்கள். அர்ச்சகராகும் முன், பூஜை, ஹோமம் செய்வதற்கான பயிற்சியை ஐந்து ஆண்டுகள் எடுப்பர். இது, சிவாச்சாரியார்களின் உரிமை மீது நடத்தப்படும் தாக்குதல். எங்களின் உரிமைகள் செல்லத்தக்கது என உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு அளித்துள்ளது. இப்பணியிடங்களில் நியமனம் செய்ய, நிர்வாக அதிகாரி, உதவி ஆணையருக்கு அதிகாரமில்லை. சட்டப்படி, அறங்காவலருக்குத் தான் அதிகாரம் உள்ளது.

எனவே, அறநிலையத்துறை ஊழியர்கள் பணி விதிகளில், எனவே, சிவாச்சாரியாளர்களின் உரிமைகளை மீறும் விதிகளை ரத்து செய்ய வேண்டும். ஆகம விதிகளுக்கு முரணாக அர்ச்சகர்களை நியமிக்கக் கூடாது என அரசுக்கு உத்தரவிட வேண்டும். அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான வழக்கு, செப்டம்பர் 1ல் விசாரணைக்கு வர உள்ளது. அதில் இவ்வழக்கையும் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் கோரப்பட்டது. இதையடுத்து, விசாரணையை நீதிமன்றம் தள்ளி வைத்தது.



விஜயபாரதம்

# விக்ரஹா ரோந்து கப்பல் சேவை




விஜயபாரதம்

இந்திய கடலோர காவல் படை ரோந்து கப்பல்கள் வரிசையில் ஏழாவதாக, உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட கடல் ரோந்து கப்பலான விக்ரஹாவை இணைத்து அதன் சேவையை துவக்கி வைக்கும் விழா இன்று சென்னையில் நடைபெற உள்ளது. மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ரோந்து கப்பல் சேவையை துவக்கி வைக்கிறார். இந்நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் ஸ்டாலின், ராணுவ தளபதி ஜெனரல் எம்.எம். நரவனே, இந்திய கடலோர காவல் படை தலைமை இயக்குநர் கே. நடராஜன் உள்ளிட்டோரும் பங்கேற்கின்றனர்.

# பொய் புகாரில் வி.ஏ.ஓ. உதவியாளர் கைது



விஜயபாரதம்

கோவை, ஒட்டபாளையம் வி.ஏ.ஓ அலுவலகத்தில் விவசாயி கோபால்சாமியின் காலில் பட்டியலினத்தை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளர் முத்துசாமி விழுந்து மன்னிப்பு கேட்கும் வீடியோ வெளியாகி பரபரப்பானது. இதனையடுத்து வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் விவசாயி கோபால்சாமி மீது அன்னூர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். அடுத்த சில நாட்களில் இச்சம்பவத்தின் மற்றொரு முகமாக நிலப்பிரச்சனை தொடர்பாக வி.ஏ.ஓவிடம் பேசிக் கொண்டிருந்த கோபால்சாமியை, முத்துசாமி கன்னத்தில் அறைந்து கீழே தள்ளி தகாத வார்த்தையில் திட்டிய வீடியோ வெளியானது. இதை மறைக்கவே முத்துசாமி காலில் விழுந்து நாடகமாடியதும், வன்கொடுமை புகார் கூறியதும் தெரியவந்தது. இதனையடுத்து வி.ஏ.ஓ கலைச்செல்வி, உதவியாளர் முத்துச்சாமி பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க விவசாய சங்கம் சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது. இதையடுத்து அன்னூர் காவல்துறையினர் இருவர் மீதும் வழக்கு பதிந்து கைது செய்தனர்.

# ஸ்டார்ட் அப்களுக்கு ஊக்கத்தொகை


விஜயபாரதம்

மத்திய அரசின் பயோடெக்னாலஜி துறையின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனமான பயோடெக்னாலஜி தொழில் ஆராய்ச்சி உதவி கவுன்சில் (பி.ஐ.ஆர்.ஏ.சி) டெலிமெடிசின், டிஜிட்டல் ஹெல்த் மற்றும் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) ஆகிய துறைகளில் 75 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் சிறப்பு ஊக்கத்தொகை திட்டத்தை மத்திய அரசு விரைவில் துவங்க உள்ளதாக தெரிவித்துள்ளது. பாரதத்தின் 75வது சுதந்திர தினத்தை கொண்டாடும் இந்த நேரத்தில் 75 சிறந்த கண்டுபிடிப்புகளை அடையாளம் காணும் பணியும் துவங்கியுள்ளது. பி.ஐ.ஆர்.ஏ.சி நிறுவனம் உயிரி தொழில்நுட்ப சுற்றுச்சூழல் வளர்ச்சிப் பிரிவுகளில் ஸ்டார்ட்அப் இந்தியா, மேக் இன் இந்தியா திட்டங்களின் கீழ் பல்வேறு புதிய முயற்சிகளை ஊக்குவித்தும் ஆதரித்தும் வருகிறது. 2010ல் துவக்கப்பட்ட இந்நிறுவனம், 1,500க்கும் மேற்பட்ட ஸ்டார்ட் அப், நிறுவனங்கள், சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 2128 கோடிக்கும் அதிகமாக நிதி உதவி அளித்துள்ளது. கடந்த 2012ல் 50 க்கும் குறைவான உயிரி தொழில்நுட்ப ஸ்டார்ட் அப்களுக்கு நிதியுதவி அளிக்க 10 கோடி ரூபாய் மட்டுமே செலவழிக்கப்பட்டது. ஆனால், தற்போது, 5,000 க்கும் மேற்பட்ட பயோடெக் ஸ்டார்ட் அப்களுக்கு ரூ. 2,500 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. வரும் 2024ம் ஆண்டுக்குள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயோடெக் ஸ்டார்ட்அப்களை ஆதரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# கோயிலை ஆக்கிரமிக்கும் அரசு



விஜயபாரதம்

சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கோயில், 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த தொண்டை நாட்டுத் திருத்தலம். பேயாழ்வார் அவதாரத் தலமாகவும் உள்ளது. இக்கோயில் டிரஸ்டிகள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இக்கோயிலின் தக்கார் பொறுப்புகள் தன்னிச்சையாக ஏற்கப்பட்டதாக கடந்த 13ம் தேதி ஹிந்து சமய அறநிலையத் துறை அறிவித்தது. இது பக்தர்களைஅதிர்ச்சியில் ஆழ்த்தியது. இதற்காக சென்னை உயர் நீதிமன்ரத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மயிலாப்பூர் ஆதிகேசவப் பெருமாள் கோயில் நிர்வாக அறங்காவலர்களை பதவி நீக்கம் செய்து அரசாணை வெளியிட்டுள்ளது ஹிந்து அறநிலையத்துறை. மேலும் அவர்கள் மீது தண்டனை நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோயில் அறங்காவலர்கள் தவறிழைத்தால், அதற்கு உரிய ஆதாரம் இருந்தால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அதனை காரணம் காட்டி அரசு கோயிலை அபகரிப்பது என்பது, குரங்கு அப்பத்தை பங்கிட்டு கொடுத்த கதையாக மாறிவிட்டதாக பக்தர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.




# நாட்டின் பெரிய விமான நிலையம்

விஜயபாரதம்

உத்தரபிரதேசம் நொய்டா மாவட்டத்தில் உள்ள ஜெவார் நகரில் யமுனா சர்வதேச விமான நிலையம் (YIAPL) என்ற தனியார் சர்வதேச விமான நிலைய கட்டுமானப்பணி துவக்கப்பட்டது. இது நாட்டின் மிகப்பெரிய விமான நிலையமாக இருக்கும் என கூறப்படுகிறது. YIAPL, சூரிச் ஏர்போர்ட் இன்டர்நேஷனலின் துணை நிறுவனம் ஆகும். முதல் கட்டமாக 1,334 ஹெக்டேர் நிலத்தில் கட்டுமானப்பணிகள் துவக்கப்படுகிறது. இது முதலில் ஒரு ஓடுபாதையுடன் செயல்பாடுகளைத் தொடங்கும். பின்னர், ஓடுபாதைகள் ஒவ்வொன்றாக சேர்க்கப்படும். ஒவ்வொரு கட்டத்திலும், பயணிகளின் எண்ணிக்கை வளர்ச்சி, போக்குவரத்துக்கு உட்பட்டு இது செயல்படுத்தப்படும். 4ம் கட்டத்தின் முடிவில் 5,000 ஹெக்டேர் பரப்பளவில் 8 ஓடுபாதைகளுடன் 70 மில்லியன் பயணிகளை கையாளும் வகையில் விமான நிலையம் விரிவடையும். இத்திட்டத்தின் முதல் கட்டம் 2023 க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அசாமில் நவீன படகு கட்டும் தளம்



விஜயபாரதம்

அசாமின் ஆறுகளில் 200க்கும் மேற்பட்ட சிறிய பெரிய படகுகள் பயணிக்கின்றன. இவை சரக்குப் போக்குவரத்து, மீன்பிடித்தல் உள்ளிட்டவற்றில் ஈடுபடுகின்றன. அவை செல்லும் நீர்வழிப்பாதைகள் மத்திய அரசின் திட்டங்களின் கீழ் செம்மைப்படுத்தப்பட்டு வருகிறது. அதே சமயம், இப்படகுகளை பழுதுபார்க்க ஒவ்வொரு முறையும் கொல்கத்தாவுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அசாமின் கவுஹாத்தியில் உள்ள பாண்டுவில் இவ்வசதியை ஏற்படுத்த அசாம் அரசு நடவடிக்கை மேற்கொண்டது. அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால், இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் மற்றும் ஹூக்லி கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனம் இடையே இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதற்கான தொழில்நுட்ப ஆதரவை சென்னை ஐ.ஐ.டி வழங்க முன்வந்துள்ளது. இதற்காக அசாம் அரசு ஒதுக்கியுள்ள நிலத்தில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் இந்த படகு கட்டும், பழுது நீக்கும் மையம் ஆகஸ்ட் 2023க்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கதிரியக்கப்பொருள் கைப்பற்றப்பட்டது



விஜயபாரதம்

மேற்கு வங்கத்தில் ஹூக்லி மாவட்டத்தைச் சேர்ந்த சைலன் கர்மாகர், அசித் கோஷ் ஆகிய இருவரும் கொல்கத்தா அருகே உள்ள என்.எஸ்.சி.பி.ஐ விமான நிலையம் அருகே பிடிபட்டனர். அவர்களிடம் 250 கிராம் எடையுள்ள நான்கு சாம்பல் நிற கற்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையில், இதனை அவர்கள் கேரளாவில் இருந்து வாங்கி விற்பனைக்கு கொண்டு வந்ததாகவும் அதனை சில லட்சங்களுக்கு விற்க முயன்றதாகவும் தெரிந்தது. அது, அணு உலைகளில் பயன்படுத்தப்படும் செயற்கை கதிரியக்க பொருளான சிந்தடிக் கலிஃபோர்னியமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. சந்தை மதிப்பில், இது ஒரு கிராம் 170 கோடி ரூபாய். எனவே இதன் மொத்த மதிப்பு ரூ. 4,250 கோடியாக இருக்கலாம். கலிபோர்னியம் இயற்கையில் கிடைப்பதில்லை. எனவே, இது எதாவது ஆய்வகத்தில் இருந்து கடத்தி வரப்பட்டிருக்கலாம். இது அணு உலைகள் மற்றும் தாதுக்களில் தங்கம் மற்றும் வெள்ளியை கண்டறிவதிலும் இது பயன்படுத்தப்படுகிறது என சி.ஐ.டி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நிறுத்தப்பட்ட யாஹூ செய்தி

யாஹூ செய்திகள் இணையத்தின் செயல்பாட்டை, யாஹூ நிறுவனத்தின் உரிமையாளரான வெரிசோன் மீடியா பாரதத்தில் நிறுத்தியுள்ளது. அது மட்டும் இல்லாமல், யாஹூ கிரிக்கெட், யாஹூ பைனான்ஸ், பொழுதுபோக்கு உள்ளிட்ட இணைய சேவைகளும் நிறுத்தப்படுள்ளன. பாரதத்தில் அன்னிய நேரடி முதலீட்டு விதியின் கீழ், 'டிஜிட்டல்' ஊடக நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீட்டு வரம்பை 26 சதவீதமாக குறைத்தது, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஊடக வணிகத்தை மறுசீரமைப்பதில் உள்ள பிரச்சனைகள், பொருளாதார சவால்கள் காரணமாக யாகூ நிறுவனம் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக தெரிவித்துள்ளது. இதனால் யாஹூ மின்னஞ்சலை பயன்படுத்துபவர்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது. அதன் சேவைகள் வழக்கம் போலவே தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயபாரதம்

YAHOO!
NEWS


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

93613 99006

# கலவரம் தரும் ஆப்கன் நிலவரம்



விஜயபாரதம்

ஆப்கனில் காபூல் விமான நிலையத்தை குறி வைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்த ஒரிரு நாட்களில் அங்கு நடைபெற்ற மனித வெடிகுண்டு தாக்குதலில், 13 அமெரிக்க பாதுகாப்பு படை வீரர்கள், குழந்தைகள் உட்பட 103 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த இரட்டை குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இதற்கு அனைத்து உலக நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. 'பயங்கரவாதத்திற்கு எதிராகவும், பயங்கரவாதிகளுக்கு சரணாலயங்களாக உள்ள அனைவருக்கு எதிராகவும் உலக நாடுகள் ஒன்றிணைய வேண்டும்' என பாரதம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், 'நாங்கள் மன்னிக்க மாட்டோம், மறக்க மாட்டோம். நாங்கள் உங்களை வேட்டையாடுவோம். இதற்கு நீங்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்' என்றார்.

கந்தஹார் விமான நிலையத்தில் அமெரிக்காவின் மதிப்புமிக்க பிளாக்ஹாக் ஹெலிகாப்டரை தலிபான்கள் டாக்ஸி போல தரையில் ஓட்டி மகிழும் வீடியோ சமீபத்தில் வெளியானது. இது உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஏனெனில், தலிபான்களால் அமெரிக்காவின் 85 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான உயர்தர போர் தளவாடங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் M24 வகை ஸ்னைப்பர் துப்பாக்கிகள் உள்ளிட்ட 6 லட்சத்துக்கும் மேலான நவீன துப்பாக்கிகள், 75,000 ராணுவ வாகனங்கள், உலகிலேயே அதி நவீன UH60 பிளாக்ஹாக் ஹெலிகாப்டர்கள் 45 உட்பட 200 க்கும் மேற்பட்ட ஹெலிகாப்டர்கள், விமானங்கள், நைட் விஷன் காமிரா, கவசங்கள் என பலவும் உள்ளன.

இவைகளை தலிபான்கள் பயன்படுத்துவதும் அவற்றை பாகிஸ்தான், ஈரான், சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு விற்பதும் உலகிற்கே ஆபத்துதான். தங்களுடைய நவீன ஆயுதங்களை இவ்வளவு எளிதில் தலிபான்களிடம் ஒப்படைத்த அமெரிக்கா உலக அளவில் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறது.

இவற்றைவிட முக்கியமாக, அமெரிக்க குடிமக்கள், ஆப்கானிய கூட்டாளிகள், கிரீன் கார்ட் வைத்திருப்பவர்கள், நேட்டோ நாட்டினர் விவரங்கள், தங்களுக்கு உதவியவர்கள் என அனைவரின் கைரேகைகள், விழித்திரை உள்ளிட்ட பயோமெட்ரிக் தகவல்களையும் தலிபான்களிடம் அமெரிக்கா பறிகொடுத்துள்ளது. இது அமெரிக்கர்களுக்கு மட்டுமல்ல, அமெரிக்க நட்பு நாடுகள் அனைத்திற்குமே மிக மிக ஆபத்தானது என பொலிடிகோ பத்திரிகை மூத்த ராணுவ வல்லுனர்களை சுட்டிக்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

# கேரளாவுக்கு ஆதரவாக சீனா



விஜயபாரதம்

கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி புரியும் சிறிய மாநிலமான கேரளாவில், பாரதத்திலேயே அதிகமான நபர்களுக்கு கொரோனா பாதிப்பு எனும் வகையில் அங்கு கொரோனா தலைவிரித்து ஆடுகிறது. நாளொன்றுக்கு சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய கொரோனா பாதிப்புகள் அங்கு பதிவாகின்றன. இது நாட்டின் மொத்த பாதிப்பில் 70 சதவீதம். கேரள முதல்வர் பினராயி விஜயன், முஸ்லிம்களை திருப்திப்படுத்த பக்ரீத் பண்டிகையின்போது, கொரோனா கட்டுப்பாடுகளுக்கு மூன்று நாட்கள் முழு விலக்கு அளித்தார். இதனால், அந்நிகழ்வு கொரோனா சூப்பர் ஸ்பிரெட்டராக மாறியது. இதற்காக கேரள அரசை உச்ச நீதிமன்றம் கண்டித்தது. இந்நிலையில், பிரபல செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸ் ஆகஸ்ட் 26ல் வெளியிட்ட 'இந்தியா மற்றும் மோடியின் அரசிற்கான கேரளாவின் கோவிட் 19 பாடங்கள்' என்ற கட்டுரையில், கொரோனாவை கட்டுப்படுத்துவதில் கேரளா சிறப்பாக செயல்பட்டதாகவும் அதிகமான பரிசோதனைகளை மேற்கொண்டதாகவும் கூறி வெகுவாக பாராட்டியது. எனினும் இது குறித்த விமர்சனங்களால் அப்பதிவை ராய்ட்டர்ஸ் நீக்கிவிட்டது. கம்யூனிச நாடான சீனாவில் உள்ள தொழில்நுட்ப நிறுவனமான ஹூவை (Huawei) இக்கட்டுரைக்கு நிதியுதவி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.டிஓ தெரிவித்துள்ளது.

# வலையில் சிக்கிய மீம்கள்



# ஆரோக்கியபாரதி தமிழ்நாடு

## பரியாவரன் சம்ரக்ஷன் (பயனுறுசூழல்)

இணைந்து நடத்தும்

# மரம் நடு விழா

## சென்னை, செங்கல்பட்டு

நாள்:29-08-20210(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

**இடம்: திருப்போரூர் தாலுகா காட்டூர் கிராமம்**
Dropped pin
https://maps.app.goo.gl/hNzEHYFU498WFrKr8

அனைவரும் குடும்பத்தோடும், நண்பர்களோடும் கலந்துகொண்டு
மரம் நடு விழாவினை சிறப்புற செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்

R.ராஜேஷ் விவேகானந்தன்
பரியாவரன் சம்ரக்ஷன் கதிவிதி
ப்ராந்த சம்யோஜக் உத்தர தமிழ்நாடு

N.S.ரமேஷ்
மாநிலத் தலைவர்
ஆரோக்கியபாரதி தமிழ்நாடு





## இயற்கையை காத்த பிஷ்னோய் மக்கள்

1731-ஆம் ஆண்டில், ராஜஸ்தான்,மாநிலம், ஜோத்பூரிலிருந்து தென்மேற்கே 26 கி. மீ., தொலைவில் தார் பாலைவனத்தில் உள்ள கேஜர்லி (KHEJARLI) என்ற கிராமத்தின் மரங்களை வெட்ட வந்த மார்வார் மன்னர் அபய் சிங்கின் ஆட்களை, அம்ருதாதேவியின் தலைமையில் பிஷ்னோய் பழங்குடி மக்கள் தடுத்து நிறுத்தியதால், 363 ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் மன்னரின் வீரர்களால் கொல்லப்பட்டனர்.இந்த இனக்குழுக்களில் உள்ள பெண்களிடம் ஒரு வினோத பழக்கம் உள்ளது. அது தாய் மான் இறந்துவிட்டால் மான் குட்டிகளுக்கு இங்குள்ள பெண்களே தாய் பால் கொடுத்து மூன்று மாதங்கள் கழித்து காட்டில் விடுகிறார்கள். மேலும் ஆண்கள் தங்களின் நிலங்களில் பயிரிடும் பயிர்களில் கொஞ்சம் பயிர்களை அருவடை செய்யாமல் விட்டுவிடுகின்றனர்.






# மறைந்திருக்கும் உண்மைகள்



விஜயபாரதம்

ஒரு ஊரில் வெட்டுபுலி என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒரு முறை தேவையில்லாமல் ஒரு கிராமவாசி மீது பழி சொல்லி பஞ்சாயத்தைக் கூட்டினான். கிராமவாசிக்குத் தண்டனை கிடைத்தது. பின், வீட்டிற்கு வந்த வெட்டுபுலியின் மனசாட்சி உறுத்தியது. பழி சொன்னதை எண்ணி வருந்தினான். தன் பாவத்திற்கு பிராயச்சித்தம் உண்டா என்று தேடினான்.

அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென்றான். "துறவியாரே! நான் இந்தக் கிராமத்தில் வசிக்கும் ஒருவர் மீது வீண் பழி சொல்லிவிட்டேன். அது என் மனத்தை உறுத்துகிறது. அந்த பாவத்தில் இருந்து தப்பிக்க எனக்கு வழி கூறுங்கள்!" என்று கேட்டான்.

துறவி சிறிது யோசித்துவிட்டு, "இன்று இரவு மூன்று கிலோ இலவம்பஞ்சை எடுத்துப்போய் அந்த கிராமவாசியின் வீட்டுக்கு முன்பு பரப்பிப் போட்டுவிட்டு நாளை வந்து என்னைப் பார்," என்றார். வெட்டுபுலியும் அதேபோல செய்தான். மறுநாள் சென்று துறவியைப் பார்த்தான். "துறவியாரே! என் பாவம் போய் இருக்குமா?" என்று கேட்டான்.

துறவி, "நீ இப்போது கிராமவாசியின் வீட்டிற்குச் செல். நீ நேற்றிரவு பரப்பி வைத்த பஞ்சை மீண்டும் பொறுக்கிக்கொண்டு வா," என்று கூறினார். வெட்டுபுலியும் ஆவலுடன் ஓடினான். ஆனால், ஒரு விரல் அளவு பஞ்சு கூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்துவிட்டன. அதனைக் கண்ட வெட்டுபுலி திடுக்கிட்டான். துறவியிடம் ஓடி வந்தான்.

"துறவியாரே! நேற்றிரவு நான் போட்டுவிட்டு வந்த பஞ்சில் ஒரு துளிப் பஞ்சாவது இப்போது அங்கு இல்லை. என்ன செய்வது?" என்று கேட்டான். துறவி சிரித்துவிட்டு, "வெட்டுபுலி! நீ போட்டுவிட்டு வந்த பஞ்சை மீண்டும் எப்படி அள்ள முடியாதோ, அதே போல, நீ ஒருவர் மீது கூறிய பழியையும் அதனால் உனக்கு ஏற்பட்ட பாவத்தையும் மாற்ற முடியாது. திருப்பி வார முடியாத பஞ்சைப் போன்றதுதான் உன் பழிச் சொற்களும். அவற்றையும் இனித் திருப்பி வாங்க முடியாது. இறைவனிடம் உன் தவறுக்காக மன்னிப்பு கேள்," என்று கூறினார்.

வெட்டுபுலிக்கு உண்மை புரிந்தது. அன்று முதல் அந்த குணத்தையே விட்டுவிட்டான். பிறர் மேல் மனதறிந்து ஒரு பழியை சுமத்தும்போது பாதிக்கப்பட்டவர்கள் மறந்தாலும் அவரை காணும்போது பாதிப்பு ஏற்படுத்திய மனிதனுக்கு நிச்சயம் மனது உறுத்தும்.